***கவனிக்க.**-2025.06.27 ஆந் திகதிய 2443 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2444 - 2025 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2025.07.04

2444ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 04ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 932 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 934 |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 940 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 942 |
| ஏல விற்பனைகள் | 945 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 25ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 11ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- சம்மாந்துறை

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2025.07.12 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதி மன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்

நீதவான்.

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை,
2025.06.23.

| *தொ. இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனப் பதிவு இல.* | *சான்றுப்பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 1. | AR/148/25 | | துவிச்சக்கர வண்டி | 1 |
| 2. | 35433/ E/25 | | கேஸ் சிலிண்டர் | 1 |
| 3. | 35433/ E/25 | | கேஸ் அடுப்பு | 1 |
| 4. | 35433/ E/25 | | இரும்பு ஸ்டான்ட் | 1 |
| 5. | 35433/ E/25 | | அலுமீனிய முட்டிகள் | 2 |
| 6. | 35433/ E/25 | | பிளாஸ்டிக் பரல் | 1 |
| 7. | 34992/ E/25 | | கேஸ் சிலிண்டர் | 1 |
| 8. | 34992/ E/25 | | பிரஸ்ஸர் குக்கர் | 1 |
| 9. | 34992/ E/25 | | கேஸ் அடுப்பு | 1 |
| 10. | 34992/ E/25 | | ரெகுலேட்டர் | 1 |
| 11. | 34992/ E/25 | | பிளாஸ்டிக் வாளி | 1 |
| 12. | 35361/Misc/25 | | இரும்பு வாளி | 1 |
| 13. | 35099/Misc/25 | | சவள் | 1 |
| 14. | 35094/Misc/25 | | இரும்பு வாளி | 1 |
| 15. | River Sand | | | 15 Cubes |
| 16. | Dirty Soil | | | 06 Cubes |

07- 593

## நீதிவான் நீதிமன்றம்- பருத்தித்துறை

### சான்றுப்பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான கீழ்வரும் சான்றுப்பொருட்கள் எதிர்வரும் 2025.07.26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

நிபந்தனைகள் .-

1. குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் குறிப்பிட்ட பொருட்களை பொது மக்கள் பார்வையிட முடியும்.

3. ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தம்முடன் தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.

4. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப் பொருளின் ஏல விற்பனையை மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்

5. ஏலத்தில் விற்கப்படும் பொருட்களை உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கிருஷாந்தன் பொன்னுதுரை,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
பருத்தித்துறை,
2025.06.24

சான்றுப் பொருட்களின் விபரம்.

| *தொ. இல.* | *வழக்கிலக்கம்* | *துவிச்சக்கர வண்டி, ஏனைய பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* | *மதிப்பீட்டு விலை* |
|---|---|---|---|---|
| 1. | 34358(B/566/18) | AA 06867 இலக்க துவிச்சக்கர வண்டி | 1 | 1000.00 |
| 2. | 36785(B/524/18) | துவிச்சக்கர வண்டி (இலக்கமற்றது) | 1 | 700.00 |
| 3. | AR/531/25 | துவிச்சக்கர வண்டி (இலக்கமற்றது) | 1 | 1500.00 |
| 4. | AR/532/25 | துவிச்சக்கர வண்டி (இலக்கமற்றது) | 1 | 2000.00 |
| 5. | AR/59/20 | 69781646 இலக்க துவிச்சக்கர வண்டி | 1 | 1200.00 |
| 6. | AR/60/20 | 69883093 இலக்க துவிச்சக்கர வண்டி | 1 | 1500.00 |
| 7. | 575/23/(B/981/22) | 69745885 இலக்க துவிச்சக்கர வண்டி | 1 | 1000.00 |
| 8. | 37168(B/151/19) | 69741439 இலக்க துவிச்சக்கர வண்டி | 1 | 900.00 |
| 9. | 1217/23(B/104/23) | இரும்பு வளையங்கள் (ஜிம் செற்) | 4 | 500.00 |
| 10. | 2059/23 | கோடரி | 1 | 350.00 |
| 11. | 339/23(B/670/21) | இரும்பு கேற் | 1 | 2000.00 |
| 12. | 32887(B/372/18) | சவள் | 1 | 150.00 |
| 13. | 1980/23 | சவள் | 2 | 300.00 |
| 14. | 1380/24 | சவள் | 1 | 200.00 |
| 15. | 115/25 | சவள் | 5 | 750.00 |

பாவனைக்கு உட்படுத்த முடியாத அலுவலக உபகரணப் பொருட்கள் ஏல விற்பனை

| *இல.* | *பொருட்கள்* | *எண்ணிக்கை* | *மதிப்பிடப்பட்ட மொத்தப் பெறுமதி* |
|---|---|---|---|
| 1. | கணினி யு.பி.எஸ் | 04 | ரூபா 200.00 |
| 2. | கணினி மேசை | 02 | ரூபா 1000.00 |
| 3. | கதிரை (கைபிடி) | 03 | ரூபா 1500.00 |
| 4. | சாஜ்சர் லைற் | 01 | ரூபா 200.00 |
| 5. | கோஸ் பைப் 1.25" | 01 | ரூபா 50.00 |
| 6. | தட்டச்சு இயந்திரம் தமிழ் | 01 | ரூபா 50.00 |

07- 563

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைக் குத்தகை விற்பனை -2025

1. 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2026 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2025, ஆவணி 21 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரையில் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத் தவறணையை குத்தகைக்கு வாங்க முன் வருபவர்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை எந்தவொரு பிரதேச செயலகத்தின் சிறாப்பர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழை காகித உறையிலிட்டு முத்திரை பொறித்து இடப்பக்க மேல் மூலையில் தான் விலை கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப் பிராந்திய செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ பன்னல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.

3.கேள்விப்பத்திரம் நிரப்பும் போதுண்டாகும் சகல திருத்தங்களும் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். அப்படியில்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2025.09.18ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளருக்கு உரியதாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளரினால் கூறும் தொகையை வைப்புப் பணமாகச் செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2026 ஆம் ஆண்டுக்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்பட மாட்டாது. அந்த நிலையம் பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பன்னல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2026.08.21 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2025.09.18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆய விற்பனை இதே அலுவலகத்தில் நடைபெறும்

9. மேலதிக விபரங்களை இப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் சிங்கள உரை பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

ஆர்.எம்.எஸ் விக்ரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பன்னல,
2025.05.20.

**அட்டவணை**

| தொடர் இல./ பெயர் | பகுதி | தவறணை திறந்திருக்கும் பரப்பளவு | கேள்விப்பத்திர வைப்புப் பணம் | கேள்விப்பத்திர இறுதி தினம்/ நேரம் | தவறணை திறந்திருக்கும் நேரம் | தவறணை மூடப்படும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01. கிரிஉல்ல | க டு க ம் ப ல பிரிவு | மகரகம/ ஹால்பனே (1566 மஹரகம பிரிவில்) | ரூபா 3500.00 | 2025.08.21 மு.ப. 10.30 | மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி தொடக்கம் | பி.ப. 2.00 மணி வரை பி.ப. 9.00 மணி வரை |

07- 535

---

**நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2026**

2026, சனவரி முதலாம் திகதி தொடக்கம் 2026, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் கள்ளுத்தவறணைகளில் நொதித்த கள்ளு சில்லறைக்கு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் மதுவரி ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கு அமைய 2025, ஓகத்து 18 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத் தவறணையை குத்தகைக்கு வாங்க முன் வருபவர்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திற்கோ பிரதேச செயலகத்திற்கோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழை காகித உறையில் இட்டு முத்திரை பொறித்து இடப்பக்க மேல் மூலையில் தான் விலை கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப் பிராந்திய செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.

3.கேள்விப்பத்திரம் நிரப்பிப் பூரணப்படுத்தப்படும் போது உண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் பூரண கையொப்பமிடப்படப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியான 2025, ஓகத்து 18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்தப்பட்ட பின் அதற்குரிய தினம் பி.ப. 3.00 மணிக்கு நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாக செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும். இந்தத் தொகை பரிசுத் தொகைக்கு செலுத்த வேண்டிய மாத 02 ஆம் வரியும் அதிகமான தொகையாக இருக்க வேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்ட வெற்றிகரமான கேள்வியாளர், சலுகை செல்லுபடியாகும் திகதியில் கள்ளுத்தவறணையை திறத்தல் வேண்டும். கள்ளுத்தவறணை நடாத்திச் செல்லப் பொருத்தமான இடம் கிடைக்கவில்லையெனில் பிரதேச செயலாளர் அதற்கான இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் இல்லை . எனினும் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் பிரதேச செயலாளரின் ஒப்புதலுடன் தவிர வேறு எந்த இடத்திலும் கள்ளுத்தவறணை ஆரம்பித்தல் கூடாது. சலுகை செல்லுபடியாகும் திகதிக்கு குறைந்தது 14 நாட்களுக்கு முன்னதாக பிரதேச செயலாளரிடமிருந்து அத்தகைய அனுமதி பெறப்பட வேண்டும்.

8. 2025, ஓகத்து 18 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2025, செத்தெம்பர் 15 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே அலுவலகத்தில் நடைபெறும்

9. மேலதிக விபரங்களை இப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஆர்.எம். இம்ரான்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2025, யூன் 20.

**அட்டவணை**

| *தொடர் இல./ பெயர்* | *பகுதி* | *கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும்* | *கேள்விப்பத்திர வைப்புப் பணம்* | *கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம்* | *கள்ளுத் தவறணை மூடப்பட வேண்டிய நேரம்* |
|---|---|---|---|---|---|
| 01. | நாரம்மல | 2025.08.18 மு.ப. 10.30 மணிக்கு முன் | ரூபா 3000.00 | மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 9.00 மணி தொடக்கம் | பி.ப. 9.00 மணி - மு.ப. 10.00 மணி வரை |

07- 538

---

## இரத்தினபுரி மாவட்டத்தின் கள்ளுத்தவறணை ஏல விற்பனை -2026

### பலாங்கொடை இல.01 கள்ளுத்தவறணை

1. 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2026, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள கால எல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1. 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின் படிவம்,

2. மதுவரிச் சட்ட நிபந்தனையில் காணப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

2. எல்லா விலைமனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் பிரதேசச் செயலகம் பலாங்கொடை எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பெற்று 1500.00 ரூபாவினைச் செலுத்தி பலாங்கொடை இல.01 கள்ளுத்தவறணை எனக்குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3.இலங்கையின் எல்லா பிரதேச செயலகங்களிலும் அல்லது மதுவரித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படி வத்தில் விலை மனு உரையையொட்டி ( சீல் வைத்து) இடப்பக்க மேல் மூலையில் பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு என்று தெளிவாக குறிப்பிட்டு விலை மனு திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலை மனுப் பெட்டியில் அல்லது பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4.எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத் தவறணைக்கு மேல் விலை மனு கோர முடியாத அதேவேளை ஒருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனு கோர முடியும்.

6. விலைமனுக்காரரால் குறிப்பிட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலைமனுக்களிலும் கையொப்பம், திகதி இடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலைமனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிட்டு உறுதிபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலைமனுக்கோரலில் வெற்றி பெற்ற மனுக்காரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத்தவறணையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. 2025.09.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை விலை மனு ஏற்றுக்கொள்ளப்படும்.விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனு பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலை மனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2025,09.12 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த மனு பெறாவிட்டால் அது மீண்டும் 2025.10.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலை மனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்படும்.

11. 2025 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூற முடியாது, திறமையான விண்ணப்பகாரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக் கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மாதாந்த கட்டணம் செலுத்திய பின் செலுத்தியதற்கான முத்திரை இடப்பட்டால் மட்டும் அனுமதிப் பத்திரத்தை குறித்த மாதத்திற்கு அனுமதிக்கப்படுவதோடு இல்லையெனில் அனுமதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறியலாம்.

லக்ஷிகா மிகெல்ஆரச்சி,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2025, யூன் 16.

**அட்டவணை**

| *கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும்* | *பிரிவு* | *அமைவிடம்* | *கள்ளுத் தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம்* | *விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும்* |
|---|---|---|---|---|
| இல.01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்கு உட்பட்ட பிரதேசம் | மு.ப.10.00 மணி - பி.ப. 2.00 மணி வரை பின் பி.ப. 5.00 - பி.ப.9.00 மணி வரை | 2025.09.12 மு.ப. 10.30 மணி வரை |

07- 539

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு**

**2026 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு வழங்கல்**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கு மற்றும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக் காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி நிபந்தனைகளுக்கும், அக் காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதி பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2026 ஆம் ஆண்டில் கள்ளுத் தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2025.08.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்ப படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன்,

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப்பணத் தொகையை இலங்கையில் உள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டையும் மற்றும்,

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளை சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை நிரப்பும்போது கேள்வி பத்திரதாரர்கள் கீழ் வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(I) கேள்விப்பத்திரங்களை முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(II) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(III) அனைத்துத் திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்வி பத்திரதாரரின் சுருக்கக் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடன்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கம் மற்றும் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இன்றேல் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கால வரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்குக் கிடைக்கும் படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

4.திருப்தியான கேள்விப் பத்திரத்தை முன்வைத்த கேள்வி பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்டு பின்னர் அன்றைய திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத் தொகையொன்றினை பிணைப் பணமாக உடப்பலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனை கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட " கொடுப்பனவுக்காக " என குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள்வங்கியிலோ வழங்கப்பட்ட"பாதுகாப்பானகாசோலை"எனஅழைக்கப்படும்காசோலையினாலோ செலுத்தப்படுதல் வேண்டும்.

5. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணைகளின் குத்தகைகள் 2025.09.01 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கான தேவைப்பாடுகள் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் ஒத்தியங்குதல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2025, யூன் 23.

**அட்டவணை**

**2026 ஆம் ஆண்டிற்காக கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளின் பட்டியல்**

| *தொடர் இலக்கமும் பெயரும்* | *பிரிவு* | *தவறணை அமைய வேண்டிய பிரதேசம்* | *தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம்* | *கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | *கேள்வி வைப்புத் தொகை* |
|---|---|---|---|---|---|
| வஹுக்கப்பிடிய கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த வஹுக்கப்பிடிய கிராமத்திற்குள் | மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப. .9.00 மணி வரை | 2025.08.04 மு.ப. 10.30 மணி வரை | 1,500.00 |
| புஸ்ஸல்லாவ கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த புஸ்ஸல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப. .9.00 மணி வரை | 2025.08.04 மு.ப. 10.30 மணி வரை | 3,000.00 |

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், 2025, யூன் 04 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

*கம்பனியின் முன்னைய பெயர் :* எல் ஓ எல் சீ இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங்ஸ் இலெவன் ( பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இல. :* PV 00268217
*பதிவு முகவரி:* 100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*கம்பனியின் புதிய பெயர் :* எல் ஓ எல் சீ மோட்டர்ஸ் வன் ( பிரைவட்) லிமிட்டட்

LOLC கோப்பரேட் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

2025,யூன் 17.

07-547

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்.

*கம்பனியின் முன்னைய பெயர் :* டயனா ட்ரேடிங் கம்பனி ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனி இலக்கம் :* பிவி 3997
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* வேரகம, கைக்காவல, மாத்தளை
*கம்பனியின் புதிய பெயர் :* டயனா பிஸ்கட் ( பிரைவட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்.

07-552

---

## பொது அறிவித்தல்

த கோல்டன் கிரவுன் ஹோட்டல் (பிவிடி) எல்டீடி மற்றும் த கோல்டன் கிரவுன் ஹோட்டல் (பிவீடீ) எல்டீடி ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(3) (b) இன் கீழ் ( சட்டம்) கோல்டன் கிரவுன் ஹோட்டல் (பிவிடி) எல்டீடி (பிவி 112027) மற்றும் கோல்டன் கிரவுன் எக்ஸ்டேன்ஷன் (பிவீடீ) எல்டீடி (பிவி 00201842) ஆகியவை சட்டத்தின் பிரிவு 242 இன்படி ஒரே நிறுவனமாக (குறுகிய முறை) இணைக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

இணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் த கோல்டன் கிரவுன் ஹோட்டல் (பிவிடி) எல்டீடி ஆகும். மேலும் இந்த இணைப்பு 2025.07.15 ஆந் திகதியன்று அமுலுக்கு வரும்.

இணைக்கப்பட்ட நிறுவனமான THE GOLDEN CROWN HOTEL (PVT) LTD இன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 322, உடுகம, அம்பிட்டிய வீதி, கண்டி என்ற முகவரியில் இருக்கும்.

07-561/1

பிரிவு 242(4) இன் படி இணைப்புத் திட்டத்தை உருவாக்குவதாகக் கருதப்படும் இணைப்பை அங்கீகரிக்கும் தீர்மானம் இணைக்கும் நிறுவனத்தின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநராலும் அல்லது ஒரு கடமையின் கீழ் உள்ள எந்தவொரு நபராலும் இணைக்கும் நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் இல. 322, உடுகம, அம்பிட்டிய வீதி, கண்டியில் சாதாரண வணிக நேரங்களில் ஆய்வு செய்யக் கிடைக்கும்.

பணிப்பாளர்கள்.

07-553

---

### குறுகிய கால ஒன்றிணைப்பு அறிவிப்பு - திருத்தம்

2025, பெப்புருவரி 21 ஆந் திகதியன்று வெறியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் 224 ஆம் பக்கத்தில் காணப்படும் "குறுகிய கால ஒன்றிணைப்பு அறிவிப்பு " எனும் தலைப்பின் கீழ், இரண்டாம் பந்தியில் முதல் வரியில் "2025 ஏப்பிறல் 27" எனத் தவறாக நடைமுறைப்படுத்தப்படும் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. சரியாக நடைமுறைப்படுத்தப்படும் திகதி 2025, மாச்சு 27 ஆகும்.

இத் தகவலின் திருத்திய அறிவிப்பு கீழே வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களை ஒன்றிணைப்பது 2025, மாச்சு மாதம் 27 ஆந் திகதின்று அல்லது கம்பனி பதிவாளர் நாயகத்தால் ஒன்றிணைப்பு சான்றிதழ் வழங்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.
இரு நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்ட முடிவின் படி, இந்த ஒன்றிணைப்பு இரு நிறுவனங்களின் நலனைக் கருத்தில் கொண்டு மேற் கொள்ளப்படுகிறது.
ஒன்றிணைப்பு நடைமுறைக்கு வந்தவுடன் புதிய நிறுவனத்தின் மூலதன நிதி உறுதித் தன்மை பரிசோதிக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெறப்படும் என பணிப்பாளர் சபையினர் நம்புகின்றனர்.

07-560

---

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2) இன் கீழான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2) இன் பிரகாரம், வைன் வேல்ட் ( பிரைவேட்) லிமிடெட் - Wine World ( Private) Limited- ( PV 81093) கம்பனியின் கூறப்பட்ட உத்தேச மூலதனக் குறைப்பை ரூ. 907,500,000.00 இருந்து ரூ.457,500,000.00 ஆக மேற்கொள்வதற்கான பகிரங்க அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகிறது.

சபையின் கட்டளைப்படி,

ஏ.இ. செல்லஹேவா,
கம்பனிச் செயலாளர்.

07-562

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2 ) ஆம் பிரிவின் கீழ், மரீனா ரேடண்ட் ( பிரைவேட்) லிமிடெட்டின் ( வியாபாரப் பதிவு இல. PV 7875 ) அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தை ரூ. 8,93,63,158.50 ( இலங்கை ரூபா எட்டுக் கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு ரூபா ஐம்பது சதம்) இலிருந்து ரூபா 8,16,13,158.50 ( இலங்கை ரூபா எட்டுக் கோடியே பதினாறு இலட்சத்து பதின்மூவாயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு ரூபா ஐம்பது சதம்) ஆகக் குறைப்பதற்கான ஒரு திட்டம் குறித்து இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

07-572

# அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு

### 2026 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகைக்கு வழங்கல்

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் மற்றும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதான வெளிநாட்டு மதுபான வகைகளை விற்கும் நிபந்தனைகளுக்கும், அக் காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும், பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2026 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மதுபான வகைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2025.08.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்ப படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன்,

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப்பணத் தொகையை இலங்கையில் உள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டையும் மற்றும்,

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி வெளிநாட்டுக் குடிவகைகள் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளை சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ் வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(I) கேள்விப்பத்திரங்களை முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(II) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(III) அனைத்துத் திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்வி பத்திரதாரரின் சுருக்கக் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதேச செயலகத்தின் பற்றுச் சீட்டு மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடன்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கம் மற்றும் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இன்றேல் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கால வரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாருக்குக் கிடைக்கும் படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

4.திருப்தியான கேள்விப் பத்திரத்தை முன்வைத்த கேள்வி பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்டு பின்னர் அன்றைய திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பு உடப்பலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத் தொகையொன்றினை பிணைப் பணமாக உடப்பலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய

வெளிநாட்டு குடிபான தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனை கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட " கொடுப்பனவுக்காக " என குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படுதல் வேண்டும்.

5. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணைகளின் குத்தகைகள் 2025.09.01 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கான தேவைப்பாடுகள் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் ஒத்தியங்குதல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2025, யூன் 23.

**அட்டவணை**

**2026 ஆம் ஆண்டுக்காக கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு குடிபான வகைகள் தவறணைகளின் பட்டியல்**

| *தொடர் இலக்கமும் பெயரும்* | *பிரிவு* | *தவறணை அமைய வேண்டிய பிரதேசம்* | *தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம்* | *கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | *கேள்வி வைப்புத் தொகை* |
|---|---|---|---|---|---|
| புஸ்ஸல்லாவ வெளிநாட்டு மதுபானத் தவறணை | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப. .9.00 மணி வரை | 2025.08.04 மு.ப. 10.30 மணி வரை | 3,000.00 |

07- 561/ 2

---

**நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகள் வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் குத்தகை விற்பனை - 2025- 2026**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2025- 2026 ஆம் ஆண்டுக்காக குத்தகைக்குக் கொடுத்தல் இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் தானிய வகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட தனி நபருக்காக சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2025.09.02 ஆந் திகதி மு.ப. 10.30 வரை கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. (அ) இத் தீவின் பிரதேச செயலாளர் செயலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளாரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது, கள்ளுத் தவறணைகளினதும், வெளிநாட்டுக் குடிவகை குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவாராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விக்காரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்திற்கொள்ள வேண்டும்.

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விக்காரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

03. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு , பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவுத்தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

05. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

06. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனைத்தினத்தன்று பி.ப. 2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப்பணம் நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்குத் தேவையான முத்திரைகள் கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

07. நியமித்த தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

08. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

09. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2025.09.30 ஆந் திகதி மு.ப. 10.30 மணியளவில் மீள விற்பனைசெய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகைபற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

டி.ஏ.பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
நிவரெலியா,
2025, யூன் 23.

**அட்டவணை**

**வெளிநாட்டு குடிவகை தவறணைகள்**

| *தவறணையின் பெயர்* | *தவறணை அமைய வேண்டிய இடம்* | *கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி* | *கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரம்* | *கேள்விகள் வைப்புப் பணம்* |
|---|---|---|---|---|
| இல. 01, நுவரெலியா | இல. 06, நுவரெலியா மாநகர சபை பிரிவிற்குள் | 2025.09.02 | மு.ப.10.30 | 5,000.00 |

07- 589

---

## ஏல விற்பனைகள்

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி ( வெளிநாட்டு கிளை) மூலம் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் ( விசேட ஏற்பாடுகள் )சட்டத்தின் 04 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி ( பதிவு இலக்கம் PQ116 ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்

**இரண்டாவது ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையினுள், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், குருந்து வத்த கிராம அலுவலர் பிரிவில், குறுந்துவத்தையில், கொழும்பு 07, பான்ஸ் பிளேஸ், இல. 112 என்ற முகவரியில் அமைந்துள்ள காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜி.ஓ.ஆர். சில்வா அவர்களால் 1998.11.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3087 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் X காணிப்பகுதி.
காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.28.30பே.). விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை , பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும்.

கம்பனி பதிவு செய்யும் இல. PV 17969 என்ற கம்பனியின் சட்டத்தின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான கொழும்பு 14, கிராண்ட்பாஸ் வீதி, இல. 257 என்ற பதிவுசெய்யும் அலுவலகத்தில் அமைந்துள்ள EI AND M ( பிரைவட்) லிமிட்டெட் அடகு வைப்பாளராக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு அடகுவைக்கப்பட்டுள்ளது.

2 ஆவது ஆதன இடாப்பு - லொட் X- (0ஏ.0றூ.28.30பே.). 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 31ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.-** 2023.05.04 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2025.05.04 ஆந் திகதியுடைய திவயின, த ஐலண்ட் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம் .- காணி 02-** டவுண் ஹோல் த சொய்ஸா வட்டார சந்தியில் இருந்து ( கண் வைத்தியசாலை எதிராக) கலாநிதி சி.டபிள்யூ. கன்னகரா மாவத்தை ஊடாக பிரயாணிக்கும் பொழுது, மேலும் 450 மீற்றர் வரை பிரயாணம் செய்து பான்ஸ் பிளேஸ் இடது பக்கம் திரும்பி, அதே வீதியில் வலதுபக்கத்தில் அமைந்துள்ள விடயமுடைய காணியை அடையும் பொழுது மொத்தமாக 01 கிலோமீற்றர் வரை பிரயாணிக்கவும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்:

(1) கொள்வனவு விலையின் 10% காணிக்காக செலுத்த வேண்டும்;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;

(3) ஏல விற்பனை விலையிலிருந்து கொமிஷன் தொகை நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து 2.5%;
(4) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 2,000.00;
(5) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(6) பெற்றுக்கொள்வோரினால் பெறுமதியின் வரி( (VAT) செலுத்தப்பட வேண்டும்;
(7) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பிரதான அலுவலகத்தில் அல்லது வெளிநாட்டுக் கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு - சிரேஷ்ட முகாமையாளர் , கடன் அறவிடுதல், கொழும்பு கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி , கொமர்ஷல் ஹவுஸ், இல. 21, சேர் ராசிக் பரீட் மாவத்தை, த.பெ. இல.865, கொழும்பு 01.
தொலைபேசி இலக்கம் : 011- 2486781.

திரிவங்கா அன்ட் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்,
விலை மதிப்பிடுபவர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 7/1/10, 1 ஆவது மாடி, சுப்பர் மார்கட் கட்டிடத் தொகுதி, பொரல்ல, கொழும்பு 08,
தொலைபேசி இலக்கம் : 011- 2396520.

07- 555

---

**சம்பத் வங்கி**
(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்.

நவலோக்க கண்ஸ்ட்றக்ஷண் கம்பனி (பிரைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0009 1000 5391

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2023.11.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.12.29 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2023.12.29 ஆந் திகதிய திவயின (Divayina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் அறுபத்தி ஒரு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி இரண்டு ரூபா நான்கு சதம் (ரூபா 617,267,962.04) 2023, நவெம்பர் 15 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் நாற்பத்தி ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 415,000,000.00) கட்டணத்திற்காக மாதாந்தம் (Monthly) at the rate of Avrage Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (AWPLR+ 2%) P.a. மேலும் இரண்டு கோடியே எண்பத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து நூற்று நாற்பத்தி இரண்டு ரூபா பதின் ஒரு சதம் (ரூபா 28,849,142.11) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாக உள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் , ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள், 4718 மற்றும் 4720 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு ஏலதாரர்களான என்.யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக லொட் A இன் வரைபட இல.8439 A ஐ 2025.08.01 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கும். லொட் A இன் வரைபட இல.8040 ஐ 2025.08.01 ஆந் திகதி பி.ப. 12.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

1.(i). மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளேயின் கங்கபொட பத்து தொம்பெ பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் தொம்பெ பிரதேச செயலாளர் பிரிவின் இந்துருகள்ள இல. 389 கிராம அலுவலர் பிரிவின் இந்துருகள்ள கிராமத்தில் அமைந்த “கொமிள்ள எஸ்ட்டேட்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் காமினி B. தொடம்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட் D; கிழக்கு: லொட் D ; தெற்கு: லொட் D; மற்றும் மேற்கு: D.S. ஜயசிங்ஹ என்பவரின் காணி மற்றும் லொட் D, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் மூன்று றூட் மற்றும் இருபத்தி ஆறு பேர்ச் (02ஏ. 03றூ. 26.00பே.) அல்லது ஒன்று தசம் ஒன்று ஏழு எட்டு ஆறு ஹெக்டயார்கள் (ஹெக். 1.1786) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட

இல. 8439A னும் வரைபடத்திற்கு அமைவாக அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 513/ 105 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ii). மேற் கூறப்பட்ட இந்துருகள்ள கிராமத்தில் அமைந்த "கொமிள்ள எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் காமினி B தொடம்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் D; கிழக்கு: D.G. ராஜபக்ஷ என்பவரின் காணி; தெற்கு: லொட் D மற்றும் மேற்கு: லொட் D, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி மூன்று பேர்ச் (00ஏ. 01றூ. 23பே.) அல்லது சைபர் தசம் ஒன்று ஐந்து ஒன்பது மூன்று ஹெக்டேயர்கள் (ஹெக். 0.1593) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்திற்கு அமைவாக அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் G 513/ 106 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) மேற் கூறப்பட்ட இந்துருகள்ள கிராமத்தில் அமைந்த "கொமிள்ள எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் காமினி B தொடம்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட் D; கிழக்கு: D.G.ராஜபக்ஷ என்பவரின் காணி; தெற்கு: லொட் D மற்றும் மேற்கு: D.S. ஜயசிங்ஹ என்பவரின் காணி மற்றும் லொட் D, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் மற்றும் சைபர் எட்டு பேர்ச் (00ஏ. 03றூ. 08.00பே.) அல்லது சைபர் தசம் மூன்று இரண்டு மூன்று ஏழு ஹெக்டயார்கள் (ஹெக். 0.03237) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்திற்கு அமைவாக அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 513/ 107 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iv) மேற் கூறப்பட்ட இந்துருகள்ள கிராமத்தில் அமைந்த “கொமிள்ள எஸ்ட்டேட்” என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவு பெற்ற நில அளவையாளர் காமினி B. தொடம்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2019.08.26 ஆந் திகதியிடப்பட்ட பிற்குறிப்பின்படி சேர்க்கப்படவுள்ள இல. 984 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 6A) உத்தரவுபெற்ற நில அளவையாளர் காமினி B தொடம்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஒற்றோபர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் D எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி, P.A. பெரேரா என்பவரின் காணி மற்றும் லொட் C; கிழக்கு: P.A. பெரேரா, D.A.பொடிஹப்புஹாமி மற்றும் ஏனையோரின் மற்றும் D.G. ராஜபக்ஷ என்பவர்களின் காணிகள் மற்றும் லொட் இலக்கங்கள் B,C மற்றும் A; தெற்கு: லொட் இலக்கங்கள் B மற்றும் C, D.S. ஜயசிங்ஹ என்பவரின் காணி மற்றும் லொட் A மற்றும் மேற்கு: D.S. ஜயசிங்ஹ என்பவரின் காணி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் N.P.ரணசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.10.07 ஆந் திகதியிடப்பட்ட இல. 27/ 2000 எனும் வரைபடத்தின் லொட் A, லொட் 5A மற்றும் இல. 479 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 4, வீதி (கூறப்பட்ட இல. 479 எனும் வரைபடத்தின் லொட் 3) மற்றும் வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு ஏக்கர் இரண்டு றூட் மற்றும் இருபத்தி நான்கு பேர்ச் (27ஏ. 02றூ. 24.00பே.) அல்லது பதினொன்று தசம் ஒன்று எட்டு ஒன்பது ஆறு ஹெக்டயார்கள் (ஹெக். 11.1896) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8439A எனும் வரைபடத்திற்கு அமைவாக அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 513/ 108 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 4718 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

2. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் பேலியகொட நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் களனி பிரதேச செயலாளர் பிரிவின் பேலியகொட - 174 கங்கபட கிராம அலுவலர் பிரிவு பேலியகொட நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 214 ஐ ஏற்ற "ஹீனெட்டிகும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் காமினி B. தொடம்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, ஓகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 8040 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: நீர்கொழும்பு வீதி மற்றும் வரிமதிப்பீட்டு இல. 226 ஐ ஏற்ற வளவு; கிழக்கு: வீதி; தெற்கு: துட்டுகெமுனு மாவத்தை மற்றும் லொட் B மற்றும் மேற்கு: லொட் B மற்றும் நீர்கொழும்பு வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் மற்றும் பன்னிரெண்டு தசம் நான்கு எட்டு பேர்ச் (00ஏ. 03றூ. 12.48பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8040 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 182/ 37 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 4720 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

07-586

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை 2025**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | |
|---|---|---|---|---|---|---|
| யூலை | .. | வெள்ளி | 04.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 20.06.2025 |
| | | வெள்ளி | 11.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 27.06.2025 |
| | | வெள்ளி | 18.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 04.07.2025 |
| | | வெள்ளி | 25.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 11.07.2025 |
| ஓகத்து | .. | வெள்ளி | 01.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 18.07.2025 |
| | | வியாழன் | 07.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 25.07.2025 |
| | | வெள்ளி | 15.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 01.08.2025 |
| | | வெள்ளி | 22.08.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் 07.08.2025 |
| | | வெள்ளி | 29.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 15.08.2025 |
| செத்தெம்பர் | .. | வியாழன் | 04.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 12.09.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது